DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.75/2025**
Prosecution Witness P.W.9

Name : **திரு.நடராஜ்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 12.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

<u>முதல் விசாரணை</u>

நான் சத்யா காலனி கண்டமனூர் ஆண்டிப்பட்டி தாலுகாவில் பழைய இரும்பு கடை வைத்திருக்கிறேன் நான் வழக்கு சம்பந்தமாக எந்த விவரங்களும் பார்க்கவில்லை. போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள். எனக்கு வழக்கு பற்றி விபரங்கள் தெரியாது என்ற விவரத்தை சொல்லி உள்ளேன்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. )**

<u>அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை</u>

தில்லை காளியம்மன் கோயில் அருகில் உள்ள ஒரு காலி இடத்தில் ஒரு பழைய இரும்பு கடை வைத்து தொழில் செய்து வருகிறேன் என்றும், அந்த கட்டிடத்தில் தேவையில்லாமல் பலர் வந்து மது அருந்துவார்கள் என்றும், சம்பவ தினமான அன்றைய தினம் கட்டிடத்திற்குள் எங்கள் தெருவில் குடியிருந்து வரும் சின்னவேல் மகன் செல்வராஜ் என்பவரின் குடும்பத்தார்களை எனக்கு தெரியும் என்றும், இறந்து போன சஞ்சீவ் குமார் ஊருக்குள் சுற்றி திரிவார்

என்றும், 2022 ஆம் வருடம் பாலமுருகனின் இளைய மகன் சீமான் என்பவர் உடன் சண்டை போட்டு சஞ்சீவ் குமார் சீமானை கொலை செய்ததாக வழக்கு இருந்து வரும் விஷயம் தெரியும் என்றும், பால்தோல் குடும்பத்தார்கள் சஞ்சீவ் குமாருடன் அடிக்கடி பிரச்சினை செய்து வருவார்கள் என்றும், பால்தோல் அவரது மகன் பார்த்தசாரதி இடம் சொல்லியும் தெருவில் போகும் போதும் வரும் பொழுது எல்லாம் பாக்கியலட்சுமி அவரது குடும்பத்தாருடன் சண்டை போட்டு செல்வார் என்றும், 21.10.2024 ஆம் தேதியன்று செல்வராஜ் மகன் சஞ்சீவ் குமாரை பால்தோல் மற்றும் அவரது மகன் பார்த்தசாரதியும், மற்றும் அஜித் குமாரும் சேர்ந்து ராஜாங்கத்திற்கு சொந்தமான பழைய கட்டிடத்திற்குள் போவதும் வருவதுமாக இருந்தார்கள் என்றும், இந்த விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும், அதனை போலீஸ் விசாரணையில் இந்த விவரங்களை சொல்லிவிட்டு தற்பொழுது நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.12 17:19:13 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.